DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
––––
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.249/2022 | Deposition of Witness for : PW5 |
| Name : தேவயானி | Father/Husband Name : சிவனனைந்த பெருமாள் |
| Age : 29 | Village : படுக்கப்பத்து பெருமாள்புரம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14 May 2025
Accused absent. Petition U/s.317 Cr.PC filed and allowed.

<u>**முதல் விசாரணை**</u> :–

1. நான் தற்போது படுக்கப்பத்து பெருமாள்புரத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சிவனனைந்த பெருமாள் எனது கணவர் ஆவார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை, கேள்விப்பட்டேன். கடந்த 04.10.2020 ஆம் தேதி மதியம் நான் படுக்கப்பத்து பெருமாள்புரத்தில் உள்ள எனது அப்பா வீட்டில் இருந்தேன். அப்போது எனது அப்பா என்னிடம் எனது கணவருக்கு கேட்டவிளை அருகே விபத்து ஏற்பட்டதாக கூறினார். எனது கணவர் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது லாரி அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். விபத்து ஏற்படுத்திய லாரி ஓட்டுநர் காசி என கேள்விப்பட்டேன். வழக்கு சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

2. என்னுடைய கணவருக்கு எந்த ஊர் என்றால் உசரத்துகுடியிருப்பு ஆகும். நான் வழக்கு சம்பவத்தின்போது என்னுடைய அப்பாவின் ஊரான படுக்கப்பத்தில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவத்தின்போது எந்த வண்டி, எப்படி மோதியது என்று தெரியாது என்றால் சரிதான், நான் கேள்விப்பட்டேன். வண்டியை யார் ஓட்டி வந்தார்கள் என்ற விபரம் சம்பவத்தின்போது எனக்கோ, எனது அப்பாவிற்கோ தெரியாது என்றால் சரிதான். போலீசார் சொன்னபிறகு தான் வாகனத்தை சம்பவத்தின்போது யார் ஓட்டினார்கள் என்ற விபரம் எனது அப்பாவிற்கு தெரியும் என்றால் சரிதான். நான் சம்பவம் குறித்து எந்த விதமான புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. சம்பவத்தின்போது நான் காவல்நிலையத்திற்கு போகவில்லை என்றால் சரியல்ல, ஒரு தடவை சென்றேன். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், பொய்யாக கொடுக்கப்பட்ட புகாருக்கு பொய்யாக சாட்சியம் சொல்ல வந்தேன் என்றால் சரியல்ல.

4. விபத்து காப்பீடு தொகை வாங்குவதற்காக பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.05.14 14:25:35 +0530
Judicial Magistrate, Sathankulam